நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 24/2025

## P.W. 6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஞானபிரகாசம் |
| தந்தை / கணவர் பெயர் | : | காந்தி |
| கிராமம் | : | காடையாம்பட்டி |
| வட்டம் | : | காடையாம்பட்டி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 38 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி காவலில் உள்ளார், தற்போது வரை ஆஜர் செய்யப்படவில்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.30 PM

1. நான் தற்போது சேலம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2024 ம் தேதி காலை 11.15 மணிக்கு பாண்டுரங்கன் மனைவி மகேஷ்வரி (57) என்பவர் அவரது

கணவர் பாண்டுரங்கன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்தபோது 13.07.2024 ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் தன்னை தெரிந்த ஒரு நபர் கை மற்றும் கல் மற்றும் மிட்டாயால் மேட்டூர் முனியப்பன் கோவில் அருகில் வைத்து அடித்ததாக சொன்னார்.

2. அடிப்பட்ட நபருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. வலதுதோள்பட்டை மற்றும் வலதுக்கை, வலதுக்கை மணிக்கட்டு வலி இருப்பதாக சொன்னார். தலை மற்றும் நெஞ்சு, வயிறு ஆகியவை வலிப்பதாக சொன்னார். அவர் மயக்கநிலையில் இல்லை.

3. அடிப்பட்ட மகேஷ்வரியை நான் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து சிகிச்சையளித்து அவருக்கு CT brain, CT facial born, CT chest, CT abdomen, CT வலதுப்பக்க தோள்பட்டைக்கும் CT Scan எடுக்கப்பட்டது. அவை அனைத்தும் நார்மலாக இருந்தது. மேலும் வலது முன்கை மற்றும் மணிக்கட்டு ஆகியவற்றிற்கு X–ray எடுக்கப்பட்டது. அவையும் நார்மலாக இருந்தது.

4. மேலும் 17.07.2024 ம் தேதி சிகிச்சை முடித்து காயம்பட்ட நபர் மருத்துவமனையிலிருந்து வெளியேறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றளித்தேன். ( **மேட்டுர் அரசு மருத்துமவனையில் மகேஷ்வரிக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்ப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் என்னை விசாரணை செய்து சென்றார்கள். தனிப்பட்ட முறையில் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. எந்த வாகனத்தில் அடிப்பட்டவர் மருத்துவமனைக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்ஸ் மூலம் வந்திருந்தால் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டிருப்பேன்.

2. அடிப்பட்ட நபருக்கு எடுக்கப்பட்ட CT Scan மற்றும் Xray ல் வெட்டுக்காயம், சிராய்ப்பு காயம், வீக்கங்கள் எதுவும் இல்லாமல் சாதாரண மனிதனுக்கு உள்ளது போலத்தான் இருந்தது என்றால் சரிதான். அடிப்பட்ட நபருக்கு நான் மட்டுமல்லாமல் பொது அறுவைசிகிச்சை நிபுநர், எலும்பு முறிவு மருத்துவர் சிகிச்சையளித்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி மருத்துவர்களும் அவர்களது

கருத்துரையின் அடிப்படையில்தான் நான் கருத்துவரை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி மருத்துவர்கள் கொடுத்த கருத்துரையிலும் சிராய்ப்பு காயமோ, வீக்கமோ, எலும்புமுறிவு எதுவும் இல்லை என்றால் சரிதான். தானாக தடுக்கி விழுந்து நான் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சாதாரணமாக காட்டுவேலை செய்தால்கூட நான் சொன்னவாறு உடம்புவலி ஏற்படும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.45PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**